பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 09 வெள்ளிக்கிழமை 25.07.2025 கதிர் 258



இனி இது ரகசியம் அல்ல!

சட்டவிரோத சொத்து குவிப்பு தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றஉறுப்பினர்சிறீதரனுக்கு பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவில் நேற்று முறைப்பாடு

☞2

# கல்வி ஓர் அடிப்படை உரிமையாக சீர்திருத்தம் மூலம் மாறவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

காலாவதியான, பழைய முறைகளைப் பின்பற்றும், பாரம்பரிய கட்டமைப்பிற்குள் மட்டுண்ட கல்வி முறையே காணப்படுகிறது. இது நம் நாட்டு மாணவர்களுக்கு செய்யும் மிகப்பெரிய அநீதியாகும். அதனால் உத்தேச புதிய கல்விச் சீர்திருத்ததில் கல்வியானது ஓர் அடிப்படை உரிமையாக அமைய வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக ஒரு வெள்ளை அறிக்கையைத் தயாரித்து, ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போதும், பின்னர் வந்த தேர்தலிலும் முன்வைத்தது, சமூக இணக்கப்பாட்டை எட்டிக்கொண்டது.

அரசாங்கம் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் ஒரு வெள்ளை அறிக்கையை முன்வைக்கும் பட்சத்தில், அதன் ஊடாக சிறந்த கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் முற்போக்கான கல்விச் சீர்திருத்தத்தை நோக்கிச் செல்ல முடியுமாக இருக்கும்.

கல்விச் சீர்திருத்தம் என்பது காலத்தின் அவசியமாகும். அது நிகழும்போது, குறித்த இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் ☞2

## 2 ஆளும்தரப்பு தமிழ் எம்.பிக்கள் இனவாதத்தை தூண்டுகின்றனர்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

ஆளும் கட்சி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் முகப்புத்தகத்தில் தமிழ் மக்களிடையே இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுகின்றனர் அதற்கு இடமளிக்கக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தி ஹெக்டர் ஹப்புகாமி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, சபாநாகரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்தே ஹெக்டர் ஹப்புகாமி ☞3

## தன் வார்த்தையை மீளப்பெற்ற ரோஹினி குமாரி எம்.பி.

“நீங்கள் வாயை மூடிக்கொண்டிருங்கள்“ என்றுசபாநாயகரைநோக்கிகூறியவார்த்தையை மீளப்பெற்றுக்கொள்கிறேன் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினைஒன்றைமுன்வைத்துஉரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

‘‘நான் நேற்று (நேற்று முன்தினம்) உரையாற்றும் போது நீங்கள் வாயை மூடிக்கொண்டிருங்கள்என்றுகூறியமைஊடாக சபாநாயகருக்கோ, அந்த பதவிக்கோ ஏதேனும் அசௌகரியம்ஏற்பட்டிருந்தால்அந்தக்கருத்தை நான் மீளப் பெற்றுக்கொள்கின்றேன் ☞3

## நேற்று மேலும் 3 எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் இன்றையதினம்வியாழக்கிழமை 3 எலும்புகூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 9 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கடந்த 04 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு அகழ்வு பணியில், 23 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் நேற்றைய தினம் இரண்டும் இன்றைய தினம் 09 ஆகவும் 11 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் ’தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01’ மற்றும் ’தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02’ என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் ☞2

## அடுத்து சிறை செல்லப்போவது யார் என்பதை அறிவதில் மக்கள் ஆர்வம்

### அந்த நிலையை ஏற்படுத்தியுள்ளதாக ஆளும்தரப்பு எம்.பி. பிரபு பெருமிதம்

அடுத்ததாக சிறைக்குச் செல்லும் நபர்கள் யார் என்பதனை ஒவ்வொரு நாளும் விசேட செய்திகளை மக்கள் எதிர்பார்த்துக்காத்திருக்கும்நிலையினை எமது ஆளும்தரப்பு மூலம் ஏற்படுத்தி வருகின்றோம் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கந்தசாமி பிரபு ☞3 தெரிவித்தார்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இன்று முற்றாக அரசியல் மயமாகியுள்ளது

### இது பாதிக்கப்பட்டவர்களுக்கு அவமரியாதை என்கிறார் சரத் வீரசேகர

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இன்று முற்று முழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன, இந்த விசாரணைகளிலிருந்து மக்கள் திசை திருப்பப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் இவ்வாறு அரசியல் மயப்படுத்தப்படுவது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமரியாதைக்கு உட்படுத்துவதாகும். நாட்டில் பொது மக்கள் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் நிலாந்த ஜயவர்தனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதனுடன் நேரடியாகத் தொடர்புடைய இப்ராஹிம் என்ற நபர் இன்னும பொது வெளியில் சுதந்திரமாகவே நடமாடிக் கொண்டிருக்கின்றார். அவர் தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்த நபராவார். கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் தாக்குதல்களை மேற்கொண்ட பிரதான சந்தேகநபரின் மனைவி எனக் கூறப்படும் சஹரா ஜெஸ்மின் ☞3

## இரசாயனப் பகுப்பாய்வு ஆளணிக் குறைவால் போதைப் பொருள் வழக்குகளில் தாமதம்

### நீதி அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

போதைப் பொருள் சம்பந்தமான வழக்குகளுக்கு இரசாயனப்பகுப்பாய்வு அறிக்கை அவசியம் என்றாலும் இரசாயன பகுப்பாய்வு பிரிவில் ☞2

## மன்னார், வவுனியா, முல்லை மாவட்டங்களின் காணிப் பிரச்சினைகளுக்கு விரைவிலே தீர்வு

### பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவிப்பு

மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் காணிப்பிரச்சினைகளுக்குவிரைவான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என காணி, நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார். ☞2

## ரோபோக்கள் போன்று பிள்ளைகளை உருவாக்கமுடியாது; மாற்றவேண்டும்

### கல்விச் சீர்திருத்தம் குறித்து ஜனாதிபதி உரை

பிள்ளைகளுக்கு சிறுவர் வாழ்க்கையை அனுபவிக் கக்கூடியவாறும், அவர்கள் 13 வருட கட்டாய கல்வியுடன் அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கக்கூடியவாறும் கல்வி மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படும். ரோபோபோன்றுபிள்ளைகளை உருவாக்க முடியாது அதனை மாற்றியமைக்க வேண்டும். அதேபோன்று அவர்களுக்கு சிறந்த வாழ்க்கையை உருவாக்கக்கூடியவாறு சிறந்த தொழில்வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ளக்கூடிய வகையில் மறுசீரமைப்புகள் இடம்பெறும் என ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சபைஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். ☞3

## இலங்கை ஆழ்கடல் மீன்பிடி படகு மடகஸ்காரில் சிறைப்பிடிப்பு

சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கைக்குச் சொந்தமான நீண்ட நாள் மீன்பிடி படகு ஒன்று மடகாஸ்கரின் கடல் எல்லைக்குள் வைத்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்தப் படகிலிருந்த 8 மீனவர்கள் தற்போது மடகாஸ்கரில் சிறைவைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்க ஆளும்தரப்பு முயற்சித்து வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நேற்று முன்தினம்(23) பிரதி அமைச்சரை சந்தித்து, அவர்களைவிடுவித்துதருமாறு கோரிக்கைவிடுத்திருந்தனர். ஐ.எம்.யு.எல்-ஏ-0899-சி.எச்.டபிள்யூ ருத் பாபஹா ☞3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

செய்யப்பட்டுள்ளது.

சிவில்சமூகசெயற்பாட்டாளர்ஒருவர்இந்த முறைபாட்டைப்பதிவுசெய்துள்ளார். அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிற்கு எதிராக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்த நபரே இந்த முறைப்பாட்டையும் செய்துள்ளார். அந்த நபர் முறைப்பாடு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னாள் அமைச்சரான கெஹலியவின் குடும்பமே சிறைக்கம்பிகளை எண்ணவேண்டிய நிலமை ஏற்பட்டது.

இப்போது அதேநபர் சிறீதரனுக்கு எதிராகச் செய்துள்ள முறைப்பாட்டில் ஒரு பின்தங்கிய பகுதியின் அரச பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய ஒருவர் அரசியலுக்கு வந்த பின்னர் எப்படி கோடிக்கணக்கில் பெறுமதியான சொத்துக்களைச் சேர்த்தார் என்று விசாரிக்கும்படி கோரியுள்ளார்.

பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சியில் அதிபராக பணியாற்றிய அவர், திடீரென கோடிக்கணக்கில் சொத்துக்களை சம்பாதித்ததில் ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் இந்த முறைப்பாட்டைத் தான் செய்திருக்கிறார் என்று முறைப்பாட்டாளர் தெரிவிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினரான ஸ்ரீதரனுடைய மனைவியின் பெயரில் இரண்டுகுளிர்களிவிற்பனைநிலையங்களும், அவருடைய மகளுடைய பெயரில் சிறப்பு அங்காடிகள் இரண்டும் இயங்குவதாகத் தான் தேடிப் பிடித்திருக்கிறார் என்றும் இவற்றின் பெறுமதி பல கோடி ரூபாய்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், கடந்த ஆட்சியின்போது வழங்கப்பட்ட மதுபானசாலை உரிமங்கள் இரண்டும் சிறீதரனின் பெயரில் வழங்கப்பட்டதாகவும் முறைப்பாட்டாளர் தெரிவிக்கிறார். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் இந்த மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் பெரும் சர்ச்சையாக மாறியிருந்தன. அரசியல் லஞ்சமாக, அதாவது, 2024 அரசுத் தலைவர் தேர்தலில் தனக்கு ஆதரவாக மற்றைய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைச் செயற்பட வைப்பதற்கு இந்த மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கங்கள் வழங்கப்பட்டன என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட ஒவ்வொரு மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களும் 2 கோடிமுதல்8கோடிவரைஅப்போதுவிற்பனை செய்யப்பட்டனஎன்றும்பேச்சடிபட்டது. வடக்கில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் ரணிலால் வழங்கப்பட்டன என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலின்போது இது ஒருபெரும் பேசுபொருளாக இருந்தது.

இவ்வாறு மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தைப்பெற்றுக்கொள்வதற்குகணவனை இழந்த குடும்பத் தலைவியான பெண் ஒருவருக்குத் தான் பரிந்துரை செய்தார் என்பதை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான நீதியரசர் விக்னேஸ்வரன் மட்டுமே ஏற்றுக்கொண்டிருந்தார். வேறு எந்தவொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகையமதுபானசாலைஅனுமதிப்பத்திரம் எதனையும்தான் பெறவில்லைஎன்றும்தான் அனுமதிப்பத்திரம் பெற்றதாக நிரூபித்தால் அரசியலில் இருந்து விலகுகின்றேன் என்றும் சிறீதரன் பகிரங்கமாகவே சவால் விடுத்திருந்தார். தனது கட்சியைச் சேர்ந்தவர்களே இது தொடர்பில் தன் மீது மறைமுகமாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்றும் இது அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாகவே இடம்பெறுகிறது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில்தான் அவர் மீது இப்போது நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டின் மீது உண்மையான, தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படுமானால், முறைப்பாட்டாளர் சொல்வதா அல்லது சிறீதரன் சொல்வதா உண்மை என்பது வெட்டவெளிச்சமாகிவிடும். ஆனால் அதற்கு அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்க அனுமதிப்பாரா? அவருக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ள புலம்பெயர்ந்தவர்கள் இடமளிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கல்வி ஓர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு அடைவது என்பது குறித்த தெளிவான புரிதல் காணப்பட வேண்டும். இந்த சீர்திருத்தங்கள் ஒரு குறிப்பிட்ட கால அட்டவணையுடன் செயல்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு செயல்முறையும் ஒழுங்கற்ற முறையில் தொடங்கினால், அதன் முடிவு வெற்றிகரமான ஒன்றாக அமையாது.

இன்று நாட்டில் காலாவதியான, பழைய முறைகளைப் பின்பற்றும், பாரம்பரிய கட்டமைப்பிற்குள் மட்டுண்ட கல்வி முறையே காணப்படுகிறது. இது நம் நாட்டு மாணவர்களுக்கு செய்யும் மிகப்பெரிய அநீதியாகும். கல்விஎன்பதுமனிதஉரிமையும் அடிப்படை உரிமையும் ஆகும்.

தற்போதைய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுத்தால், நலன்புரி பொருளாதாரத்தின் முக்கிய அம்சங்களான கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், வாழும் உரிமை, பொருளாதாரம், சமூகம், கலாசாரம், மதம் மற்றும் அரசியல் போன்ற உரிமைகள் மனித மற்றும் அடிப்படை உரிமைகளாக அமையும் விதமாக இருக்க வேண்டும். தற்போதைய கல்வி முறைமை புதுப்பிக்கப்பட வேண்டும்.

கல்வியை ஸ்மார்ட்டான ஒன்றாக மாற்றும் போது ஸ்மார்ட் மாணவர், ஸ்மார்ட் இளைஞன், ஸ்மார்ட் குடிமகன், ஸ்மார்ட் நாடு உருவாகும். கல்வியில் வழக்கமான மனப்பாடம் செய்யும் கற்றல் முறையை இல்லாதொழித்து, நாடும் உலகமும் எதிர்கொண்டு பன்முக பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்குத் தீர்வுகளை வழங்கக்கூடிய குடிமக்களை உருவாக்க வேண்டும்.

நமது நாட்டின் கல்வித்துறையில் தகவல் தொழில்நுட்பம்கட்டாயமாக்கப்படவேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், ஆங்கிலம், கலை மற்றும் கணிதம் ஆகிய துறைகளை நோக்கிச் செல்ல வேண்டும். ஆங்கில மொழியை மையமாகக் கொண்ட கல்வி சகல பாடசாலை கட்டமைப்பிலும் முன்னெடுக்க வேண்டும்

செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல் மற்றும் இயந்திரவியல் கற்றல் போன்ற புதிய தொழில்நுட்பக் கல்வியை நாட்டுப் பிள்ளைகளுக்குபெற்றுக்கொடுக்கவேண்டும். கல்விக்கான மனித உரிமையை நாம் உண்மையிலேயே பாதுகாக்க வேண்டும்.

பிரதமர் முன்வைத்த விடயங்களில மூலோபாய ரீதியான விடயங்களோ செயல்பாட்டுரீதியானநடவடிக்கைகளில்போதிய விவரங்களோஅடங்கியிருக்கவில்லை. இதை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது மற்றும் செயல்படுத்துவதற்கான காலக்கெடு என்பன தெளிவாகத் தெரியவில்லை. 2029 ஆம் ஆண்டில் உறுதியான அடைவுகள் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. உரிய செயல் வரைவு காணப்படாத விடத்து, பாடசாலை கல்வியில் பாதிக்கும் மேற்பட்ட மாணவர்களால் இதன் பலன்களைப் பெற முடியாமல் போகும்.

பாலர் கல்வியில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் பிரதமர் தெளிவாக குறிப்பிடவில்லை. இந்த சீர்திருத்த திட்டத்தில் கிராமப்புறபாடசாலைகளைமேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை.

உயர்தரக் கல்வியை வழங்கும் 3,000 பாடசாலைகளில் 1,000 பாடசாலைகள் மாத்திரமே விஞ்ஞானம் மற்றும் கணிதக் கல்வியை போதிக்கின்றன. ஆசிரியர் பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து தெளிவான திட்டம் எதுவும் இந்த புதிய சீர்திருத்தத்தில் குறிப்பிடபட வில்லை. ஆசிரியர்களின் நலன் கூட புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்தமாற்றத்தைஏற்படுத்தும்பயணத்தை ஆரம்பிக்க, பாடசாலைத் துறையில் ஈடுபட்டுள்ள சகலரையும் மையமாகக் கொண்டதொரு திட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டும். பாடவேளையின் கால அளவைக் கருத்தில் கொள்ளும்போது, ஆல்பா மற்றும் பீட்டாதலைமுறைகளின்எண்ணங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பட்டபின் கற்கைகள், பிரயோக ஆங்கிலத் திறன்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு என்பன புறக்கணிக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் கவனம் செலுத்தப்படவுமில்லை. பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களை இலக்காக் கொண்டதிட்டம்பற்றியோ, ஊட்டச்சத்துதிட்டம் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

240,000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் குறித்தும்தெளிவானதகவல்எதுவும்இல்லை. கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி குறைந்த மட்டத்திலயே செலவிடப்படுவதால், குறித்த ஒதுக்கீடு இங்கு முழுமையாக பயன்படுத்த வேண்டும்

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் கட்டாயமாக்கப்பட்டது போல, வரலாற்றுப் பாடத்தையும் முக்கிய ஒரு பாடமாக ஆக்க வேண்டும். கல்வி முறைமையின் தரத்திற்கு இது முக்கியமானது. வரலாறு என்பது விடயங்களை மனப்பாடம் செய்யும் நடவடிக்கையல்ல. மாறாக ஒரு நாட்டினது குடிமக்களின் அடித்தளத்தை கட்டமைக்கும்மானிடவியலாகும். பொதுவான பாரம்பரியம், கலாசார விழுமியங்களைப் புரிந்துகொள்ள இப்பாடப்பரப்பு உதவுகிறது. கடந்த கால வரலாற்று நிகழ்வுகளிலிருந்து காரண-காரிய விளைவுகளின் தொடர்பு குறித்து புரிந்துகொள்வது விமர்சன சிந்தனை, பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் போன்றவற்றை விருத்தி செய்யும். எனவே, வரலாறு கட்டாயப் பாடமாக ஆக்கப்பட வேண்டும்.

ஸ்மார்ட் கல்வி மூலம் நமது நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம், மனித மூலதன மேம்பாடு என்பன நோக்கி இந்த சீர்திருத்தம் செல்ல வேண்டும். கல்வி முறைமையின் மூலம் வெளிவரும் இளைஞர்கள், யுவதிகள், குடிமக்கள் சர்வதேச தொழிலாளர் சந்தையில் வேலைவாய்ப்புகளை அணுகுவதற்கும், சர்வதேச தொழிலாளர் சந்தையில் தொழிலை பெறுவதற்கும் முடியுமாக இருக்க வேண்டும். இதன் மூலம், கல்வித் துறையில் காணப்படும் உள்ளோர் இல்லாதோர் இடையேயான பேதங்களைநீக்க முடியும். இலவச கல்விக்குள் காணப்பட்டு வரும் இந்தப் பேதத்தை நீக்க வேண்டும் என்றார்.

## நேற்று....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் பகுதி அகழ்வு பணிகள் இன்றைய தினம் 19ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது

அதன்போதுஇரண்டுமனிதபுதைகுழிகளில் இருந்தும் இன்றைய தினம் வியாழக்கிழமை 03 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி கடந்த 04 நாட்களாக முன்னெடுக்கப்படும் அகழ்வு பணியில் , இன்றைய தினத்துடன் 23 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் , 11 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 28 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் போது, இன்றையதினம்அகழ்ந்துஎடுக்கப்பட்ட 09 எலும்பு கூட்டு தொகுதியுடனுமாக 76 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 88 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இன்றைய தினம் எலும்பு கூட்டு தொகுதிக்கு மேலதிகமாக சிறிய கண்ணாடி போத்தல் ஒன்றும் , இரும்பு துகள்கள் சிலவும் சான்று பொருட்களாக மீட்கப்பட்டுள்ளது. அவைசான்றுபொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு , நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் குழந்தைகளில் பால் போச்சி போன்றதான போத்தல் , ஆடைகளை ஒத்த துணி, சிறுவர்களின் காலணிகள் என நம்பப்படும் பொருட்கள் போன்ற சான்று பொருட்கள் கடந்த தினங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவை எதிர்வரும் நாட்களில் அகழ்ந்து எடுக்கப்படவுள்ளன.

## இரசாய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவும் ஆளணி பற்றாக்குறை காரணமாக வழக்குகள்தாமதமாகின்றனஎனநீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது முஜிபுர் ரஹ்மான் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் உரிய நேரத்தில் கிடைக்காததால் அநேகமான வழக்குகள் தாமதமாகின்றன. அதனால் கைதிகளின் விடுதலைகள் காலதாமதமாகின்றன. அந்த அறிக்கைகளை உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹூமான் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், 'நாட்டில் கொரோனா நிலவிய சூழ்நிலையில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குறைந்த அளவில் போதைப் பொருளை வைத்திருந்து கைது செய்தவர்களை விடுவிப்பது என்ற கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்பட்டது. அதுவும் கூட இரசாயன பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு இல்லாமல் எவரையும் விடுவிக்க முடியாது.

போதைப்பொருள் சட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதில் 10 கிராம் போதைப் பொருளுக்கு அதிகம் என்றால் பிணைபெற மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செல்லவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் பிரச்சினை என்னவென்றால், இரசாயன பகுப்பாய்வு சோதனை அறிக்கை கிடைக்கும் வரை எந்த நீதிமன்றம் என்பதைக்கூட தெரிவு செய்ய முடியாத நிலையே காணப்படுகிறது. அந்த வகையில் இரசாயன பகுப்பாய்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதே அவசியமாக உள்ளது.

ண்மையில் சுமார் 6,000 பேர் போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதும் ஏனைய வழக்குகள் தாமதமாவதற்கும் இந்த இரசாயனபகுப்பாய்வு அறிக்கை தாமதமாகுவதே காரணம்.

அதனால் இரசாயன பகுப்பாய்வு பிரிவுக்கு மேலும் 32 பேரை நியமிப்பதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளநடவடிக்கைமேற்கொள்ளப்படும்

அண்மைக் காலங்களில் சிறிய அளவில் போதைப்பொருள் வைத்திருப்போர் மாத்திரமன்றி 5 கிலோ 10 கிலோ மற்றும் அதற்கு மேற்பட்ட போதைப் பொருளை வைத்திருந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் பெரும் சூரை மற்றும் பாறைகள் அகப்படும் காலம் இது.

போதை பொருள் பாவனையாளர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். சுமார் ஒரு மில்லி கிராம் அதற்கு குறைவான அளவு தொடர்பில் கைது செய்யப்படுபவர்கள் விரைவில் விடுவிக்கப்படுகின்றார்கள். எனினும்சிறைச்சாலைகளில்உள்ளவர்களில் அதிகமானோர் பெருந்தொகை போதைப் பொருட்களுன் தொடர்பு பட்டவர்களாவ ர் என்றார்.

## மன்னார்,.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில்நேற்றுகாதர்மஸ்தான் எம்பி நிலையியற் கட்டளை 27/2 ன் கீழ் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில்நிலவும்காணிபிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஏனைய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படும் .

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில்54,000ஏக்கர்காணி, வவுனியா மாவட்டத்தில் 24,000 ஏக்கர் காணி மற்றும் மன்னார் மாவட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட ஹெக்டெயார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

வன பாதுகாப்பு திணைக்களத்தால் அதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது.

தற்போது அது தொடர்பில் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையே நடத்தப்பட்டுள்ளது என்பதால் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச்செல்வதற்காக மாவட்டரீதியில் குழுக்கல் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்றார்

## அடுத்து சிறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கம்பெனிகள் திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இலங்கையின் கடந்த ஆட்சிக்காலங்களில் கரைபுரண்டுபோயுள்ள ஊழல், மோசடி, கறுப்பு பணம்தூய்மையாக்கல்மற்றும்பயங்கரவாதம், இனவாதம் மற்றும் மதவாதங்களை தூண்டுவதற்கு நிதியளிப்பதனைத் தடுக்கும் செயன்முறைக்குத்தேவையானவசதிகளையும் திட்டமிட்டு தடுப்பதன் ஒரு நோக்கமாகவும் குறித்த கம்பனிகள் சட்டத்திருத்தினை எமது அரசாங்கம் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளது.

எமது நாட்டின் தனிநபரின் சராசரி வருமாத்திற்கு மேல் ஒவ்வொரு குடிமகனும் கடன்கார மக்களாக காணப்படுவதும் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் எமது நாட்டில் சனத்தொகையின் அடிப்படையில் கடன்காரர்களாகவே பிறக்கின்றனர்.

இந்த நிலையினை கடந்த வருடங்களாக நாட்டினைஆட்சிசெய்தஆட்சியாளர்கள்நாட்டின் சட்டம் மற்றும் நீதித்துறையினையும் சேர்த்து தமது தேவைக்காகவும் தமது பங்காளிகளின் தேவைக்காவும் நாட்டை ஆட்சி செய்ததன் செயற்பாடே இதற்கான முழுக்காரணமாக காணப்படுகின்றது.கடந்த காலங்களில் எமது நாட்டின் பொருளாதாரம் வங்குறோத்து நிலையினை எதிர்கொண்டதற்கும் நாட்டில் நடைமுறையில்இருந்தஊழல்மோசடிகளுடன் கூடிய ஆட்சியே காரணம்.

கடந்த ஆட்சியின் மத்திய வங்கியின் ஆளுனர் தொடக்கம் நிதிஅமைச்சர் அமைச்சரவை இதற்கு குற்றவாளிகளாகவும் பெயரிடப்பட்டுஅதற்கானகூடவிசாரணைகளும் தற்பொழுதுவிசாரணையில்உள்ளது.இவற்றிற்கு உரிய நீதியினை வழங்குவதற்கும் நாட்டின் வலுவானசட்டத்திருத்தங்கள்மேற்கொள்ளப்பட வேண்டும் அதில் எமது அராங்கம் உறுதியாக உள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் அதிகளவான இலஞ்ச ஊழல் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் கடந்த காலத்தின் அதிகாரத்தில் இருந்த ஆட்சியாளர்கள் அவர்களின் உறவினர்கள் அவர்களுடன் இணைவாகச் செயற்பட்ட அரச அதிகாரிகள் தொடக்கம் நீதிமன்றங்களின் ஊடாக தண்டனைகளைப் பெற்று சிறைச்சாலைகளில் உள்ளனர்.

மக்கள் மத்தியில் அடுத்ததாக சிறைக்குச் செல்லும் நபர்கள் யார் என்பதனை ஒவ்வொரு நாளும் விசேட செய்திகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையினையும் எமது அரசாங்கத்தின் ஆட்சியின் மூலம் ஏற்படுத்தி வருகின்றோம்.

கடந்த ஆட்சிக்காலத்தில் அனைத்து துறைகளிலிலும் ஊழல் மோசடிகளை அதிகார துஸ்பிரயோகங்களை மேற்கொண்டவர்கள், அதற்கு துணைபோனவர்கள் அனைவரும் தற்பொழுது எமது அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களைவிமர்சிப்பவர்களாகவும் எமது அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்கிவருவதனை ஊடங்களில் அறிக்கை அரசியலினை மேற்கொள்வதனை தவிர்த்து கொள்வது பொருத்தமானதாக அமையும் என்றார்.

## தன் வார்தையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதனை கூறிக்கொள்கின்றேன்‘ என்று அவர் நேற்றுத் தெரிவித்தார்.

‘இவ்வாறானகருத்துஎனதுவாயில்இருந்து வெளிவருவதற்குகாரணமுண்டு.நடுநிலையாக இருக்க வேண்டியவர் அடிப்படைவாதியாகச’ செயற்படும் போது அவ்வாறான கருத்துக்கள் வெளிவரும்எவ்வாறாயினும்அந்தக்கருத்தை நான் மீளப் பெற்றுக்கொள்கின்றேன் என்றார்.

## உயிர்த்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிலும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறு பேசப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்தொடர்பில்எவ்விதநடவடிக்கையும் எடுக்காமல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை முற்றுமுழுதாகஅரசியல்மயப்படுத்தியுள்ளனர். இந்த விசாரணைகளிலிருந்து மக்கள் திசை திருப்பப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் இவ்வாறு அரசியல் மயப்படுத்தப்படுவது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமரியாதைக்கு உட்படுத்துவதாகும்.

இன்று இந்த நாட்டில் பொது மக்கள் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் ஏதேனுமொரு பகுதியில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இவை பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. எவ்விதகுற்றச்செயல்களிலும் ஈடுபடாத போதிலும் மக்கள் அச்சத்துடனேயே நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

புலனாய்வுப்பிரிவு இதனை விட உத்வேகத்துடன் செயற்பட வேண்டும். பொலிஸாருக்கு வேண்டிய சலுகைகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும். பாதுகாப்பு துறை பலப்படுத்தப்பட்டால் மாத்திரமே பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியம். இவ்வாறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததால்தான் இன்று பொது மக்கள் பாதுகாப்பு பூச்சிய நிலைமைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என்றார்.

## 2 ஆளும்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

கடற்றொழில் அமைச்சரிடம் கடந்த முறை கேள்வியெழுப்பிய போது அவர் தமிழ் மொழியிலே பதில் அளித்தார். நாங்கள் தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் மதிப்பவர்கள். என்றாலும் குறித்த சம்பவத்தின்போது , அமைச்சர் தமிழ் மொழியில் பதிலளித்ததை நாங்கள் தவறான முறையில் கண்டதாக தெரிவிக்கப்பட்டது. அப்போது தமிழ் மொழி தொடர்பில் எவ்வித பிரச்சினையும்இல்லைஎன்பதனைதெளிவாக குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால் அமைச்சரும் அவருடன் இருக்கும் மேலும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எனது புகைப்படத்தையும் பயன்படுத்தி அவர்களின் முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளனர். நடக்காத ஒன்றை சிங்கள நாடாளுமன்றஉறுப்பினர்ஒருவரின்படத்துடன் அவ்வாறு முகப்புத்தகத்தில் குறிப்பிட்டு தமிழ் மக்களிடையே கொண்டு செல்லும் போது அங்கே இனவாதமே உருவாகும். அவ்வாறான விடயங்கள் மூலமே இனவாத பிரச்சினைகள் ஆரம்பமாகும். அதனால் இதற்கு இடமளிக்கக்கூடாது என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-6) என்ற நீண்டநாள் மீன்பிடி படகு கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி வெல்லமன்கரை மீன்பிடி துறைமுகத்திலிருந்துகடலுக்குச்சென்றுள்ளதுடன் ஜூன் 2 ஆம் திகதி மடகாஸ்கர் நாட்டின் விசேட பொருளாதார வலயத்திற்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, அந்நாட்டு மீன்பிடி ரோந்து படகு மூலம் மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது மடகாஸ்கரின் விசேட பொருளாதார வலயத்திற்குள் நுழைவதற்குத் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க அவர்கள்தவறியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. மடகாஸ்கர் அதிகாரிகளால் படகை சோதனையிடப்பட்டபோது, மீன்பிடிகண்காணிப்பு மையத்தால் படகின் பயணப் பாதையை கண்காணிக்க முடியாமல் போயுள்ளதுடன் படகுக்கான அனுமதிப்பத்திரம் , செல்லுபடியான மீன்பிடிஉரிமம்ஆகியனஇருக்கவில்லையென்றும் அந்நாட்டு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் படகில் குளிரூட்டப்பட்டிருந்த 16,125 கிலோகிராம் சுறாக்களும், உலர்த்தப்பட்ட 1,618 கிலோகிராம்சுறாக்களும்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. படகிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட சுறா இனங்கள் அழிந்து வரும் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் குறித்த மாநாடு உடன்படிக்கையின் ஹுஹு ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளதாகவும் மடகாஸ்கர் சுற்றுச்சூழல் புலனாய்வு பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவிக்கையில்,

இது குறித்து சீஷெல்ஸில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் செயலாளருடன் கலந்துரையாடியதுடன், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் பொருத்தமான மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியை பெற்றுத்தருமாறும்கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர் கிடைத்தவுடன், வழக்கை துரிதப்படுத்தி, மீனவர்களை விடுவித்து மீண்டும் இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். கடற்றொழில் அமைச்சும் கடற்றொழில் திணைக்களமும் இது குறித்து கவனம் செலுத்தியுள்ளதுடன், மீனவர்களின் குடும்பங்களுக்கும் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நாடுகளின் கடல் எல்லைகளை மீறுவதால், இவ்வாறான துரதிர்ஷ்டவசமான நிலைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. இவ்வாறான சம்பவங்கள், சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நற்பெயருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்பதற்கு பெருமளவிலான முயற்சியும் நிதியும் செலவிடப்படுகின்றது.

அனைத்து மீனவ சமூகத்தினரும், குறிப்பாகப் படகு உரிமையாளர்களும், ஏனைய நாடுகளின் விசேட பொருளாதார வலயங்களுக்குள் பிரவேசித்துசட்டவிரோதமீன்பிடிநடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து, சர்வதேசக் கடற்பரப்பில் மாத்திரம் சட்டரீதியாக மீன்பிடித்துப் பாதுகாப்பாக நாடு திரும்புமாறு கோரிக்கை விடுக்கிறோம். சட்ட ரீதியாகச் செயற்படுவதன் மூலம் இவ்வாறான சிரமங்களைத்தவிர்த்துக்கொள்ள முடியும்என்றார்.

இதேவேளை இந்த கைது தொடர்பாக கடற்றொழில் அமைச்சுக்கு 2025 ஜூன் 11 ஆம் திகதி ஒரு வாட்சப் செயலி மூலம் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. குறித்த தகவல் அத்தினமே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் அனுப்பப்பட்டது எவ்வாறாயினும், படகு உரிமையாளர் இந்த சம்பவம் தொடர்பாக அமைச்சுக்கோ அல்லது கடற்றொழில் திணைக்களத்திற்கோ எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும்வழங்கவில்லை. அத்துடன், கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கும் படகு உரிமையாளர் இது குறித்து அறிவிக்க வேண்டாம் எனவும் அழுத்தம் கொடுத்துள்ளார்.

மடகாஸ்கர் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அங்கு பிரெஞ்சு மொழியில் வழக்கு விசாரணைகள் நடத்தப்படுகின்றன. ’இந்த நிலையில், எங்கள் மீனவர்கள் சிங்கள மொழி பேசுவதால், சிங்கள மற்றும்பிரெஞ்சுமொழிபெயர்ப்பாளர்இல்லாததால் நேற்று (ஜூலை 22) நடைபெற்ற வழக்கு ஆகஸ்ட் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த மேலும் தெரிவித்தார்.

## ரோபோக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய கல்வி முறைமையும் அதன் மூலம் உருவாகியுள்ள இளைஞர் சந்ததி தொடர்பிலும் அதேபோன்று இந்தக் கல்வி முறைமையால் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் தொடர்பிலும் எவரும் திருப்தியடைய முடியாது. இதனால் எமக்கு மிகவும் பரந்துபட்ட கல்வி மறுசீரமைப்பு அவசியமாகும். இந்தக் கல்வி மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்படும்போது பலரும் பாட விதானங்கள் தொடர்பில் கதைக்க ஆரம்பித்துள்ளனர். வரலாறு உள்ளடக்கப்படுமா? இல்லையா? என்றும் கலந்துரையாடினர். ஆனால் பாடத்திட்டங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்ட திருத்தமாக இந்த யோசனைத் திட்டம் இருக்காது. எமது முழு சமூகம், பொருளாதாரம் மற்றும் எமது நாட்டை புதிய மாற்றத்திற்கு கொண்டு செல்லும் மறுசீரமைப்பாக அமையும்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எம்மிடம் இருக்கும் முக்கிய வளமாக மனித வளமே காணப்படுகின்றது. இதனால் இந்த மனித வளத்தை பலப்படுத்தி எவ்வாறு நாட்டை புதிய நிலைக்கு கொண்டு செல்வது என்றே பார்க்கின்றோம். வறுமை நிலையில் இருந்து மீட்கவும், குற்றங்களை குறைக்கவும் கல்வி முக்கியமானது. இந்த மாற்றத்தின் ஆரம்பம் கல்வியாகும். இதனாலேயே எமது கொளகைப் பிரகடனத்தில் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம். முதலாவதாக கல்வியில் இருக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணவேண்டும். இல்லாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் பிரயோசனமில்லை. இந்த நேரத்தில் கல்வித்துறை முகம்கொடுத்துள்ள நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும்.

இதில் பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவது ஒரு நெருக்கடியாக உள்ளது. 2019ஆம் ஆண்டில் 16,673 பேர் இடை விலகியுள்ளனர். அதேபோன்று 2021ஆம் ஆண்டில் 20,759 பேரும் 2024ஆம் ஆண்டில் 20,755 பேரும் இடைவிலகியுள்ளனர். இவர்கள் படிக்க வேண்டிய காலம் இருந்தும் பாடசாலைகளை விட்டுச்சென்றுள்ளனர். பிள்ளைகள் 13 வருடங்கள் கல்வியை பெறாமல் பாடசாலைகளை விட்டுச் செல்லக்கூடாது.

அதாவது 2006ஆம் ஆண்டில் பிறந்த பிள்ளை 2011ஆம் ஆண்டில் பாடசாலையில் சேர்கிறது. அதன்படி 358,596 பேர் பாடசாலையில் சேர்வதுடன், அவர்கள் 2021ஆம் ஆண்டிலேயே சாதாரண தரப் பரீட்சைக்கு முகம்கொடுக்க வேண்டும். ஆனால் 311,000 பேரே அந்தப் பரீட்சைக்கு முகம்கொடுக்கின்றனர். இதன்படி 47,000 பேர் வரையிலானோர் பரீட்சைக்கு முன்னரே இடை விலகியுள்ளனர். இவ்வாறான நிலமையில் கல்வி மறுசீரமைப்பு அவசியமாகும். 13 வருட கல்வியை கட்டாயமாக்கி இந்தப் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும். எந்தவொரு பிள்ளையும் பாடசாலையில் இருந்து இடைவிலகிவிடக்கூடாது. நாங்கள் கல்வித் திட்டங்களை முன்னெடுப்பதுடன், 3 நாட்கள் அந்தப் பிள்ளை தொடர்ச்சியாக பாடசாலைக்கு வரவிட்டால் அரச அதிகாரி அந்தப் பிள்ளை தொடர்பில் தேடிப்பார்க்கவேண்டும்.

அத்துடன் பாடசாலைகளில் உள்ள மாணவர் எண்ணிக்கை தொடர்பில் கூறும் போது 2023ஆம் ஆண்டில் ஒரு மாணவரும் சேர்க்கப்படாத 98 பாடசாலைகள் உள்ளன. அத்துடன் 10 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய 115 பாடசாலைகள் உள்ளன. 20 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய 406 பாடசாலைகளும் 30 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையுடைய 752 பாடசாலைகளும் 50க்கும் குறைவான மாணவர்களை கொண்ட 1506 பாடசாலைளும் உள்ளன. இதனால் முழு பாடசாலைகட்டமைப்பில்15வீதமானவை50க்கும் குறைவான மாணவர்களை கொண்டுள்ளது. 100 மாணவர்களைவிடவும்குறைவானஎண்ணிக்கை கொண்ட 3144 பாடசாலைகள் உள்ளன. இதன்படி அரச பாடசாலைகளில் மூன்றில் ஒரு பங்கு நூற்றுக்கும் குறைவான மாணவர்களே உள்ளன. இதனால் பாடசாலை கட்டமைப்புகள் தொடர்பில் மீளாய்வு செய்யவேண்டும். இந்த தீர்மானத்தை நாங்கள் நிச்சயம் எடுப்போம். சில பாடசாலைகளை மூடவேண்டும். சில பாடசாலைகளை இணைக்கவேண்டும். சில இடங்களில் புதிதாக பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

கிராமபுறங்களில், சமூக பின்னடைவு உள்ள பகுதிகளை சேர்ந்த பிள்ளைகளே இவ்வாறான பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். ஆனால் இந்த பிள்ளைகளுக்கு புதிய சமூகத்துடன் இணையாது. புதியதிறமைகள்உருவாகாது. புதிய வாய்ப்புகள் உருவாகாது. பாடசாலைகளும் ஊரும் ஒரே சமூக மட்டத்திலேயே இருக்கும். இதனால் இதில் மாற்றங்களை செய்ய வேண்டும். அது தொடர்பில் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பில் அதிகாரிகள் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்களுக்கு போக்குவரத்து பிரச்சினைகள் இருந்தால் அதற்கு தேவையான ஏற்பாடுகளையும் செய்யலாம்.

இதேவேளைசகலமாவட்டங்களிலும்ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. 18 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் எனற ரீதியில் இருந்தாலும் ஆசிரியர பற்றாக்குறை நிலவுகிறது. 30 மாணவர்கள் இருக்கும் இடத்தில் 9 ஆசிரியர்கள் இருக்கும் பாடசாலைகளும் 3 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளும் உள்ளன. இதன்மூலம் மனித வளம் வீணடிக்கப்படுகிறது. இதனால் கல்வி மறுசீரமைப்பின் ஊடாக சகல பிள்ளைகளுக்கும் தரமான கல்வியை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை சமூகம் தொடர்பான அக்கறை இல்லாத பிள்ளைகள் உருவாகின்றனர். இயந்திரங்கள் போன்றே பிள்ளைகள் வளர்க்கப்படுகின்றனர். அதிகாலை 4 மணிக்கு மேலதிகவகுப்புநடக்கின்றது. அந்தவகுப்பு முடிந்து பாடசாலைசென்றுபின்னர்மாலைநேரவகுப்புக்கு போகின்றனர். அதிகாலை 1 மணி வரையிலும் அவ்வாறு கற்க வேண்டியுள்ளது. பிள்ளைகளுக்கு சிறுவர் வாழ்வு அவசியமில்லையா? இவ்வாறு பயணிக்க முடியாது. பிள்ளைகள் மீதான கல்வி சுமைகளை குறைக்க வேண்டும். இது எமது பொறுப்பாகும்.

பிள்ளைகளின்நிலைமையைபாருங்கள். தூர இடங்களில்இருந்தும்கொழும்புபாடசாலைகளுக்கு பிள்ளைகள் வருகின்றனர். காலையில் தாய் எழுப்பும் போதும் பிள்ளை தூங்குகிறது, பஸ்ஸிலும் தூங்குகிறது. பாடசாலையிலும் தூங்குகிறது. இது பாவமில்லையா? பிள்ளை வெளியில் சென்று விளையாட வேண்டும். ஆனால் அதற்கு இடமளிக்கப்படுவதில்லை. ரோபோ போன்று பிள்ளைகளை உருவாக்க வேண்டுமா? அதனை மாற்றியமைக்க வேண்டும். அதேபோன்று அவர்களுக்கு சிறந்த வாழ்க்கையை உருவாக்கக்கூடியவாறு சிறந்த தொழில்வாய்ப்புகளைஉருவாக்கிக்கொள்ளக்கூடிய வகையில் மறுசீரமைப்புகள் இடம்பெறும்.

கல்வி மறுசீரமைப்பு என்பது பரந்துபட்ட விடயமாகும். இது பாடவிதானங்களில் மறுசீரமைப்பு செய்வதில் மாத்திரம் நின்றுவிட முடியாது. மாணவர்களுக்கு போன்று ஆசிரியர்களும்புதியவிடயங்களைகற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக 5 வருடங்களுக்கு ஒரு முறை அவர்களுக்கு பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு விரிவான கல்வி மறுசீரமைப்பையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதனை உடனே செயற்படுத்த முடியாது. அதற்கு காலம் எடுக்கும். அதனால் அஅதற்கான வேலைத்திட்டத்தை இப்போது ஆரம்பித்தால் 2029ஆம் போது செயற்படுத்த முடியுமாகும். அதனால் இந்த நடவடிக்கையில் அரசியல் இல்லாமல் அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கல்விச் சீர்திருத்தம் என்பது நீண்டகால அடித்தளமாயிருக்க வேண்டும்

இலங்கையின் கல்வித்துறை மீதான புதிய சீர்திருத்த முயற்சி தற்போது நாட்டில் பரவலான விவாதங்களை உருவாக்கியுள்ளது. ஆளும்தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தம் குறித்து, பல்வேறு தரப்பினர், குறிப்பாக ஆசிரியர் ஃஜீஆஸ்ரீமு–ற்ஜுன்ஃஜீகுஸ்ரீஃஜீவ; (தொழிற்சங்கங்கள்), கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர் குழுக்கள், பல்வேறு கேள்விகளையும், சிந்தனைகளையும் முன்வைத்துள்ளனர். பாடசாலை நேரம் அதிகரிப்பது, பாடத் திட்டத்தில் மாற்றங்கள், தொழில்நுட்பங்களை பின்பற்றும்விதமான ஆணைகள், ஆசிரியர்பயிற்சிகள்போன்றவை எல்லாம் மனப்பூர்வமான கலந்துரையாடலின்றி அறிவிக்கப்படும் போதுதான் எதிர்ப்புகள் உருவாகின்றன.

எதிர்கால உலகிற்கு ஏற்றவாறு, தொழில்நுட்பத் திறன்கள், நுண்ணறிவு, நுணுக்கமான யோசனைத்திறன், மனிதநேயம் ஆகியவற்றைப் பொருத்து ஒரு புதிய கல்வி அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை மிகவும் முக்கியமானது. ஆனால், அவசரமாக, அரசியல் வெற்றியை அடையாளப்படுத்தும் ஒரு முயற்சியாகவே கல்விச் சீர்திருத்தம் அமையும்போது அது எதிர்விளைவுகளை மட்டும் உருவாக்கும். கல்வி என்பது ஒரு பன்முக செயல்முறை. அது ஒரு சமூகத்தின் மெய்யுணர்வை வளர்க்கும், தலைமுறைகளுக்கு வழிகாட்டும், சிந்தனையை வளர்க்கும் ஒரு அடித்தளம். இதனை தற்காலிக அரசியல் தீர்வுகளுக்கேற்ப மாற்ற முடியாது.

கல்வி என்பது ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும் முயற்சிக்கப்பட வேண்டிய அரசியல் வாதத்திற்குரிய கருவியாக இருக்கக்கூடாது. கடந்த காலங்களில், கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில், பல்வேறு அமைச்சர்கள் அவரவர் காலங்களில், ஒவ்வொரு பாணியில் மாற்றங்களைஅறிமுகப்படுத்தியுள்ளனர். இதன்விளைவாக, கல்வி கொள்கையில் தொடர்ச்சியற்ற செயல்பாடுகளும், மாணவர்களின் திறன் வளர்ச்சியில் குழப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

தற்போதைய கல்வி மாற்றங்களில், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர், தொழில்நுட்பநிபுணர்கள், மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் ஆகியோரின் பங்களிப்பு இல்லாமல் ஒரு மேடையில் அமர்ந்த சில அதிகாரிகள் உருவாக்கும் கொள்கைகள், நிலையான வளர்ச்சிக்கு வழிவகுப்பதில்லை. அது ஒரு புறக்கணிப்பாகவே புரியப்படும்.

மேலும், பாடசாலை நேரம் அதிகரிப்பு, மையப்படுத்தப்பட்ட தேர்வுகள், புதிய பாடவளங்கள், மொழிப்பிறழ்வுகள் போன்ற விவகாரங்களில் ஆரம்பத்திலிருந்தே நம்பிக்கையுடனான கலந்துரையாடல்கள் அவசியமாகின்றன. கல்வியாளர்களுக்கே தெளிவாக விளக்கப்படாத மாற்றங்கள், பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும் குழப்பத்தை மட்டுமே ஏற்படுத்தும்.

தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சி, பாடநெறிகளின் தரம், மொழிச் சீரமைப்பு, தொழில்நுட்ப உட்புகுத்தல், ஊடகக் கல்வி, மற்றும் பொதுவாக மாணவர் நலன் ஆகியவையே கல்வி மாற்றத்தின் மையமாக இருக்க வேண்டும். இன்று மாற்றங்கள் அறிவிக்கப்படும் முறை, மேலதிக சுமைகளைக் கல்வித்துறையில் இருப்பவர்கள்மீது கொட்டுகின்றன. ஆசிரியர்கள் ஒரு செயல்விளக்கமில்லா சூழலில், நிர்வாக உத்தரவுகளை மட்டும் நிறைவேற்றும் அதிகாரிகளாக மாற்றப்படுவது பெரும் கவலையை ஏற்படுத்துகிறது.

நீண்டகால அடிப்படையிலான கல்விச் சீர்திருத்தமொன்றை உருவாக்க, அரசியல் ஆட்சி மாறினாலும் தொடரும் வகையில், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட கல்விக் கொள்கைப் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு சட்டபூர்வமான நிலைத்தன்மை வழங்கப்பட வேண்டும். கல்விக்கெதிராக அரசியல் வாதம் நிகழாத வகையில், கல்வியியல் சுதந்திரத்தையும், கல்வித் திட்டங்களில் வல்லுநர் குழுக்களின் பங்கையும் உறுதி செய்ய வேண்டிய நேரம் இது.

கல்வி என்பது வெறும் தேர்வுகளை வெல்லும் பயிற்சியாக இல்லாமல், வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் பயணமாக இருக்கவேண்டும். அந்தபயணம் மாணவர்களுக்குபயனளிக்கும்படி மாற்றங்களை வடிவமைப்பதே நமது கடமை.

இவ்வாறான சூழ்நிலையில், ஆளும்தரப்புக்கு வேண்டியது தாமதமின்றி செயல்படுவதல்ல; மாறாக, விரிவான கலந்துரையாடல்களுடன், பொருந்தக்கூடிய மாற்றங்களை, நம்பிக்கை மற்றும் செயற்பாட்டு திறனுடன் செயல்படுத்துவதே கல்வியின் மீதான உண்மையான பற்று என்பதைக் காட்டும். இதுவே இலங்கையின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் கல்விச் சீர்திருத்தத்தின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

## டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாட்டின்போது ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு அவசியம்

### பிரதமர் ஹரினி வலியுறுத்து

டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் போது தரவு பாதுகாப்பு தனியுரிமை மற்றும் ஒழுக்கநெறி ஆகியவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பை உருவாக்குவது அவசியம் என பிரதமர் ஹரினி தெரிவித்துள்ளார்.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற சர்வதேச டிஜிட்டல் மனநலம் குறித்த கலந்துரையாடலின் போது இதை அவர் தெரிவித்தார்.

இலங்கையில்டிஜிட்டல்மனநலம்தொடர்பான சவால்களைத் தீர்க்க புத்தாக்க தொழில்நுட்பத் தீர்வுகளை ஆராய்வதே இந்தக்கலந்துரையாடலின் நோக்கம் ஆகும்.

பிரதமர் இக்கூட்டத்தில் மேலும் தெரிவித்ததாவது:

பரந்த அளவில் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் ஓர் அங்கமாக தற்போதைய மனநல சேவையை டிஜிட்டல் தளத்திற்கு மாற்ற தேவையான தீர்வுகள் குறித்து அரசின் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. புத்தாக்கத்தை ஊக்குவிப்பது டிஜிட்டல் தொழில்நுட்ப அடிப்படையில் செயல் திறன் பாதுகாப்பு தரவு தனியுரிமை மற்றும் ஒழுக்கநெறிகள் தொடர்பான விடயங்களை உறுதி செய்யும் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

நன்கு பயிற்சிபெற்ற மனநல ஊழியர்களின் படையும் சமூக மட்டத்திலான ஒருங்கிணைந்த பல்துறை மற்றும் பல்வகைச் செயற்திட்டங்களும் இதற்கு மிக முக்கியமானவை. புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் டிஜிட்டல் மயமாக்கலில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே தேவையான டிஜிட்டல் ஆரோக்கியம் மற்றும் பிள்ளைகளின் மனநலம் குறித்த போதுமான புரிதல் இல்லாமை போன்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே இவ்வாறான விடயங்களை எடுத்துரைக்கும்விதமாக எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனறார்.

## எதிர்காலத்திற்கு ஏற்றவகையில் கல்வியில் மாற்றமேற்படுத்துவதே சீரமைப்பின் நோக்கம்

### அமைச்சர் சரோஜா சாவித்திரி தெரிவிப்பு

பாடத்திட்டங்களையன்றி எதிர்கால உலகுக்கு பொருத்தமான வகையில் கல்வி முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவதே கல்வி மறுசீரமைப்பின் நோக்கமாகும் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்ற போது கல்வி மறுசீரமைப்பு, சுகாதாரத்துறை மறுசீரமைப்பு மற்றும் போக்குவரத்து துறை மறுசீரமைப்பு தொடர்பில் தெளிவான கொள்கையைக் கொண்டிருந்தது.

இந்த கல்வி மறுசீரமைப்பு என்பது வெறுமனே பாடத்திட்டங்களை நவீனமயப்படுத்துவதோ புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதோ பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதோ மட்டுமின்றி கல்வி முறைமையை முழுமையாக மாற்றுவதே நோக்கமாகும்.

அத்துடன் சுற்றாடல், நாட்டு மக்களின் ஒருமைப்பாடு, தேசிய நல்லிணக்கம் தொடர்பில் தேசிய கொள்கையுடனான தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தியது. இவற்றை புதிய கொள்கை வரைபுடன் நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

அந்த வகையில் கல்வி மறுசீரமைப்பானது பாடசாலையில் மாணவர் ஒருவர் கல்வி கற்பதற்கு மேலதிகமாக எதிர்காலத்துக்கு தேவையான உலகளாவிய திறமையை வளர்த்துக் கொள்வது முக்கியமாகும். கல்வி மறு சீரமைப்பில் நாம் எதிர்பார்த்த மாற்றங்களை கொண்டு வரும் போது இறுதியானதும் அல்லது கடுமையான தீர்மானத்துடனுமான ஒன்றை சமூகத்தில் திணிப்பது எமது நோக்கம் அல்ல.

2031ல் கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை எழுதும் ஒரு மாணவர் 2033 ஆம் ஆண்டில் உயர்தரத்தில் தோற்றி இறுதியில் அவர் ஒரு சமூகப் பிரஜையாகிறார். அந்த வகையில் அடுத்த வருடத்தில் முதலாம் ஆண்டில் சேர்க்கப்படும் ஒரு மாணவர் 2035 ஆம் ஆண்டு தமது முழுமையான கல்வியை நிறைவு செய்து கொண்டு தொழில் உலகிற்குள் பிரவேசிப்பார்.

அந்த வகையில் நாம் உருவாக்கும் கல்வி மறுசீரமைப்பானது வருடாந்த தேவையை அல்லது இந்த வருடத்தின் தேவையை நிறைவு செய்வதற்கு அப்பால் இன்னும் பத்து வருடங்களுக்கு பின் உலகம் எவ்வாறு இருக்கும் என்பதை கருத்திற் கொண்டு சேவை,தொழில் வாய்ப்பு ஆகியவற்றுக்கு பொருத்தமானதாக அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்றார்

## கல்வி இளமாணி பட்டதாரிகள் 250 பேருக்கு வேலையில்லை

### சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டு

அரச பல்கலைக்கழகங்களில் கல்வி இளமானி பட்டப்படிப்பை நிறைவு செய்த 250 பேருக்கு வேலை இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு, பேராதனை மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 250 கல்வி இளமானி பட்டதாரிகளுக்கு கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக நியமனம் வழங்கப்படாமலுள்ளது. இவ்வாறு 3 குழுக்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படாமல் காணப்படுகின்றனர்.

உயர்தரத்தில் அமைந்த பட்டங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி பெற்ற அரச பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் சூழலில், அமைச்சரவை முடிவுகள் காரணமாக நியமனங்கள் தாமதமாகியுள்ளன

கல்வி இளமானி பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வொன்றைப் பெற்றுக் கொடுங்கள். இவர்களின் நலன் கருதி சரியான நடவடிக்கை எடுக்கப்படாததற்கான காரணத்தை அறிய விரும்புகிறோம். நியமனங்களை வழங்கும் விடயத்தில் சட்டப் பிரச்சினை தடையாக இருந்தால், அந்த சட்டப் பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன் நியமனங்களை பெற்றுக் கொடுங்கள் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கறுப்பு அத்தியாயங்கள்

என். சத்திய மூர்த்தி

இப்போது செம்மணிப் புதைகுழி விவகாரம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை குறித்தெல்லாம் குரல் எழுப்பும் தமிழ் தரப்புகள் மறந்து போன விடயம் ஒன்று உள்ளது. கடைசி போர் முடிந்து பதினைந்து வருடங்கள் கடந்த பின்னரும், அப்போது அரசு தத்தெடுத்துக் கொண்ட ஆயிரக்கணக்கான தமிழ் சிறார்கள் என்ன ஆனார்கள், என்று இன்றுவரை யாருக்குமே கவலை இல்லை. காரணம், அவர்களுக்கு வாக்கு இல்லை என்பதாலா, அல்லது 'வாய்ஸ்' இல்லை என்பதாலா? தெரியவில்லை.



இனப்போர் முடிந்து, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு, மூவாயிரம் வலையிலான எண்ணிக்கையில் தமிழ் சிறார்கள் அனாதையாக்கப்பட்டுள்ளனர் என்று அறிவித்தது. இல்லை, இல்லை, அந்த எண்ணிக்கை எட்டாயிரத்தை தாண்டும் என்று தமிழர் தரப்பில் சிலர் கூச்சலிட்டனர்.

இடையில், அந்த அனாதைக் குழந்தைகளை சர்வதேச சேவை நிறுவனங்கள் தத்தெடுத்து வளர்க்கத் தயாராக இருப்பதாக செய்திகள் வெளியாயின. ஆனால், அரசு தரப்பு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.. பெரும்பாலான சிறார்கள் இந்து மதத்தை சார்ந்தவர்கள். அவர்களை சர்வதேச சேவை நிறுவனங்களிடம் ஒப்படைத்தால், அவர்களை கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்துவிடுவார்கள், என்பது அரசின் கருத்தாக, 'கவலையாக' (!) இருந்தது.

மாறாக, அரசே அந்தச் சிறார்களை தத்தெடுத்துக் கொண்டு, அவர்களை அவர்கள் சார்ந்த மதங்களின் அடிப்படையிலேயே வளர்க்க இருப்பதாக அறிவித்தது. ஆனால், அன்று தொடங்கி இன்றுவரை அந்தச் சிறார்கள் என்ன ஆனார்கள் என்று இங்கு இருக்கும் தமிழ் தலைமைகளோ, புலம்பெயர்ந்தோரோ கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. அவர்கள் குறித்த நினைவு இருந்தால்தானே, அவர்கள் கவலைப்படுவதற்கு!

## இளம் துறவி

ஆனால், அந்தக் காலகட்டத்தில், ஒரு சில தமிழ் தலைவர்கள் தங்களது கவலைகளை போகிற போக்கிற்கு பதிவு செய்திருந்தனர். அதாவது, சேவை நிறுவனங்களிடம் ஒப்படைத்து அந்த சிறார்களை கிறிஸ்துவர்களாக மத மாற்றம் செய்வதை தடுக்கும் அதேவேளையில், அரசே அவர்களை பௌத்தர்களாக மத மாற்றம் செய்து இளம் துறவிகளாக மாற்றிவிடும் என்பதுதான் அவர்களது கவலையாக இருந்தது. அதில் சிறிது உண்மையும் இருந்தது.

அதாவது, கடந்த தொண்ணூறுகளின் முதல் பகுதிகளில் குறிப்பாக, 'திடீர்' ஜனாதிபதியாக பதவியேற்ற டிங்ரி பண்டா விஜயதுங்கே காலத்தில், நாட்டில் உள்ள பௌத்த மடாலயங்களில் இளம் துறவிகளை சேர்க்கும் பணி துரிதமாக முன்னெடுக்கப்பட்டது;. அப்போதைய தரவுகளின் படி, ஏழ்மையான சிங்கள-பௌத்த குடும்பங்களில்இருந்துஒரு சிறுவனையோ அல்லது சிறுமியையோ இளம் துறவியாகபணியமர்த்த ஊக்குவிக்கப்பட்டார்கள். அதற்காகவே, பௌத்த மடாலங்களுக்கு அரசு அதிக நிதி வழங்கியது.

இந்தப் பின்னணியில், இனப்போரால் அனாதரவாக விடப்பட்ட தமிழ் சிறார்களை பௌத்த மடாலங்களில் இளம் துறவிகளாக அரசே சேர்த்து விட்டுவிடும் என்ற கவலை அன்றே பதிவு செய்யப்பட்டது. ஆனால், இது குறித்து நாடாளுமன்றத்திலோ, பொது வெளியிலோ, அன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட எந்தவொரு தமிழ் தலைமையும் கேள்வி எழுப்பவில்லை. இன்றளவும் அவர்களின் வழி தோன்றல்களும் அவ்வாறே.

## போராளி சிறார்கள்

இது இப்படி என்றால், இனப்போர் காலத்தில், அதுவும்குறிப்பாகக்கடைசிவருடங்களில்விடுதலைப் புலிகள் அமைப்பால் 'கடத்தி செல்லப்பட்ட' சிறார்கள் குறித்து என்ன சொல்ல? 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்' பட்டியலில் இந்தச் சிறார்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதா? அது போன்றே, விடுதலைப் புலிகள் அமைப்பால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சிறார்களைக் கண்டுபிடிக்கவும், அரசால் நியமிக்கப்பட்ட அமைப்பு முயற்சிகளை முன்னெடுக்குமா?

இது குறித்தும் இங்குள்ளவர்கள் யாருமே வாய் திறப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால், ஒரு கட்டத்தில் அந்தச் சிறார் போராளிகளைப் போற்றிப் பாராட்டி வளர்த்ததே அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடேல் அம்மையார்தான் என்று சொல்லப்பட்டது. அவருக்கு உதவியாக இந்த பணியில் அமர்த்தப்பட்டவர்கள், கடைசி போரில் மடிந்து விட்டார்களா? அல்லது, இங்கேயோ, மேற்குலக நாடுகளிலோ மறைந்து வாழ்கிறார்களா?

அந்த விதத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களில்கூட வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பாகுபாடு இருக்கிறதா? அதாவது, அரசிற்கும், விடுதலை புலிகள் அமைப்பிற்கும் இதில் வித்தியாசம் இருக்கிறது என்று தமிழர் தரப்புகளோ, சர்வதேசமோ இன்னமும் கருதுகிறதா? இதுபோன்ற கேள்விகள் இதுவரை கேட்கப்படாவிட்டாலும், இனி பொது வெளியிலும்

நாடாளுமன்றத்திலும்கூட எழுப்பப்படலாம்.

தற்போது, இது போன்ற கேள்விகள் தென்னிலங்கையின் பேரினவாத அறிவுஜீவிகளால் பத்திரிகைகளிலும் சமூக வலைதளங்களிலும் அவ்வப்போது அலசப்படுகிறது. அவர்கள் ஒன்றும் நல்லெண்ணத் தூதுவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளவில்லை. மாறாக, சமகால தமிழர் சரித்திரத்தின் மறந்துபட்ட கறுப்பு அத்தியாயங்கள் சிலவற்றை படம் போட்டுக் காட்டுகிறார்கள் அவ்வளவுதான்.

## ஏக பிரதிநிதி

அது போன்றே அவர்கள் கூற தொடங்கி இருக்கும் மற்றொரு விடயமும் விடுதலை புலிகள் அமைப்பை பற்றியதே. அதாவது, அந்த அமைப்பு தலையெடுக்கும்வரை, தமிழர் சமூகத்திலும் சரி, அரசியலிலும் சரி, கீழ் சாதியினருக்கு இடமிருக்கவில்லை. அவர்கள் தோன்றி, தமிழர்களின் 'ஏக பிரதிநிதி' என்ற அந்தஸ்தை தங்களுக்கு தாங்களே சூட்டிக்கொண்டு தமிழர்களை துப்பாக்கி மூலம் ஆட்சி செய்ய தொடங்கும் வரை இந்த நிலைமையே தொடர்ந்தது, என்பதும் சிங்கள கட்டுரையாளர்களின் வாதம்.

முக்கியமாக, சாதி பிரிவினையின் காரணமாகதான், விடுதலை புலிகள் அமைப்பினர், மேல் சாதி தமிழ் தலைவர்களையே குறிவைத்துக் கொன்றார்கள். முதலில் போராளி குழுக்கள் ஆகட்டும், அல்லது பின்னர் மிதவாத அரசியல் தலைவர்கள் ஆகட்டும், விடுதலைபுலிகள் அமைப்பின் கையில் உயிர் இழந்த தமிழ் தலைவர்களில் பலரும் மேல் சாதியினரே, என்ற ஒரு வாதம் இன்னமும் முன் வைக்கப்படுகிறது.

அதேசமயம், குறிப்பாகக் கடைசிப் போர் காலகட்டத்தில், ஒடுக்கப்பட்ட சாதியினரும் பெருத்த எண்ணிக்கையில் போராளிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். அது போன்றே, எழுபதுகளில் ஜேவிபி-க்கு பயந்து வன்னியில் தஞ்சம் அடைந்த மலையகத் தமிழர்களும் இனப்போரில் பலிகடா ஆக்கப்பட்டார்கள். இதுவும் ஒரு வாதம்.

வன்னியில் மறைந்து வாழ்ந்த மலையகத் தமிழர்கள்; என்ன, தங்களது இன அடையாளம் அரசினருக்கு தெரிந்தால் இந்தியாவிற்கு அகதிகளாக நாடு கடத்தப்பட்டு விடுவோம் என்ற பயத்தில், இலங்கைத் தமிழர்களாக மக்கள் தொகை கணக்கெடுப்புகளில் தங்களைப் பதிவு செய்துகொண்டவர்கள். ஆனால், சமுதாயத்தில் அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படாதவர்கள். இது போன்ற வாதத்தைத்தானே விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து செல்லும்போது, கிழக்கு மாகாணத்தில் கருணா-பிள்ளையான் அணியினர் முன்வைத்தனர்.

சரி, இதை எல்லாம் சொல்வதற்கு அல்லது குத்திக்காட்டுவதற்கு, தென்னிலங்கை பேரினவாதிகளுக்கு என்ன அருகதை இருக்கிறது? நல்ல கேள்வி, ஆனால், அவ்வாறான அருகதை இல்லை என்பதுதான் தங்களது மேலான அருகதை என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும்.

எது எப்படியோ, இவை எல்லாம்கூட, சமகால தமிழர் சரித்திரத்தில் கருப்பு அத்தியாயங்களே!



உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# கலைகளினால் மேம்படும் மனிதம்

மனித சமூக மேம்பாடுக்கான் மிகப்பெரிய மூலதனமாககலைப்பயில்வைஇன்றையகல்வியாளர் முன் மொழிகின்றனர்.

கலைகளைப்பயிலும் , கலை ஆற்றுகைகளில் சிறந்து விளங்கும் பிள்ளைகள் கல்வியிலும் சிறந்து விளங்குகின்றனர் என்பது எங்கள் அனுபவ பாடமுமாகும்.

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா

என பாரதி தாசன் பாடுவார். இது தனிமனித துயர்களையும் அனுபவமாக மட்டுமன்றி இன்றைய உளசிகிச்சை முறையாகவும் கூட உணரப்படுகின்றது.

கலைகள்இன்றையமனவெழுச்சிகொந்தளிப்புகளை சமநிலைக்கு கொண்டுவருகின்றது .இது கலையில் ஈடுபடும் கலைஞருக்கு மட்டுமானது அல்ல; எண்ணற்ற ரசிக மனங்களிலும் ஆறுதலை விளைவிக்கின்றது.

கலை அனுபவங்கள், வேறுமனே மன ஆறுதலுக்கானவை என்ற நிலைக்கு அப்பால் மனித சமூக மேம்மைக்கான வழிமுறையாகவும் அமைந்திடுதல் இன்றியமையாதது .கலைப் படைப்புகளின் வழி நாம் வேண்டிய நிற்கும் சமூக மாற்றங்களை நிதர்சனமாக்கிய அனுபவங் களை சந்தித்திருக்கிறோம். கலையின் இந்த விரிந்த பயனை மென்மேலும் காணும் திசையில் எங்கள் கலைப்பயில்வும் கலைத் திட்டங்களும் வளர்த்தெடுக்கப்படுவது அவசியமாகும் .

கலைஎன்றபெயரில்இன்றுஎங்கள்பண்பாட்டுப்புலத்தினை ஆக்கிரமிக்கும் போலிக்கலை வியாபாரங்கள் ,அவை விதைக் கும் கனவுகள் , ஆரவாரங்கள் தொடர்பானஎச்சரிக்கைஉணர்வும்இன்றியமையாதது என்பதனையும் கலை பற்றிய இந்த சிந்தனைக் குறிப்பில் சொல்லாமல் விட முடியாது .

'உங்களை மகிழ்விக்க வருகின்றோம்' என்ற மகுடத்துடன் எங்களை ,எங்கள் இருப்பை மலினமாகும் நவீன ஊடகங்களின் பாவனை தொடர்பான விழிப்புணர்வுக் கல்வியையும் தர வேண்டி யுள்ளமை கவனத்துக்குரியது .

- கலாநிதி கௌரி சண்முகலிங்கன்

# வாதவூர் அடிகள்



நரிகளுக்கு கொள்ளு கொடுத்த மாணிக்கவாசகர்.. குருவாக காட்சி கொடுத்த சிவபெருமான்.. சிறிய ஆவுடையார் கோயில்!

மனிதன்தெய்வத்தோடுவைக்கின்றஇணக்கமானது எப்படியாய் இருப்பினும் அது நல்லதையே நல்கும். திருவாதவூர அடிகள் அரனிடம் அமைச்சராய் இருக்கும் பொழுது குதிரை வாங்கும் நிலையில் அரசனின் கோபத்துக்கு ஆளானார். அரசன் அவரைத் தண்டித்தான். அடியார்க்காக ஆண்டவனே அடிபட்டார். ஆண்ட வன் மேல் விழுந்த அடி அரசனிலும் விழுந்தது.அடியுண்ட அரசனுக்கு நல்லறிவு பிறந்தது. வாதவூரருக்கு பல வகையில் உதவிட அரசன் முன்வந்தான். ஆனால் வாதவூரரோ தாம் துறவறத்தையே நாடுவதாகக் கூறினார். அரசனும் வாதவூரர் வழியினைப் பெரு வழியென ஏற்றுக் கொண்டான்.

மனிதன் என்பவன் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்கும் பொழுது அத்துறைக்கு ராஜன் ஆகிறான். பாண்டிய மன்னன் அவையில் அமைச்சர் ஆனதால் வாதவூரர் புவிராஜனாகிறார். தித்திக்கும் திருவாச கத்தை அளித்ததமையால் கவிஜாரன் ஆகிறார். அவரின் பக்தியுடை வாழ்வால் அவர் தவராஜனாகிறார். பல சிறப்புக்களைப் பெற்ற வாதவூரர் நிறைவில் நடராஜனுக்கே உரியவராய் திகழ்கிறார் எனலாம்.

வாதவூரர் வண்டாய் பறந்தார். அந்த வண்டு ' திருவாசகம் ' என்னும் தேன் கூட் டையும் ' திருக்கோவையார் ' என்னும் தேன் கூட்டையும் கட்டி நாமனைவரும் நாளும் பொழுதும் வேண்டிய தேனைப்பெற்று சுவைத்திட வழி சமைத்திருக்கிறது எனலாம்.

உடையாள் உந்தன் நடு இருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்து
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே

என்னும் வேண்டுகளை வாதவூர் வண்டு இறைவனிடம்சொல்லுகிறது.இதுதெவிட்டாத் தேனாகி இனிக்கி றதல்லவா !

திருவாசகமென்னும் தேன் பருகினார் ஒரு அடியவர். அவரால் தனது உணர்வினை வெளிப்படுத்த சொற்களைத் தேடுகிறார்.அவர் தேடியதை அளிக்கிறார் பருகுவோம் வாருங்கள்....

வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்துஉயிர்கலந்துஉவட்டாமல்இனிப்பதுவே–

இப்படிச் சுவைத்தவர்தான் வள்ளல் பெருமான்.

வாதவூர் வண்டு மலர்கள் தோறும் எடுத்தவந்த தேனால் ஆக்கப்பட்ட திருவாசகத்தை தமிழர்களாகிய நாம்மட்டும்சுவைத்துமகிழ்வதுபெருமைதான். ஆனால் தமிழ் அறியா ஒருவர், எங்கள் சைவம் சாரா ஒருவர், அதுவும் ஆசிய நாட்டைச் சேராத ஒருவர், ஆங்கில நாட்டை சேர்ந்த ஒருவர் கிறீத்தவ பாதிரியாரானவர் திருவாசக மென்னும் தேனைத் தொட்டதும் தன்னை மறந்தார். அந்தத் தேன்கூட்டுக்குள்ளேயே புகுந்து தேனை மாந்திக் கொண்டே இருந்தார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தல்லவா!

சிவனை முழுமுதற் கடவுளாகப் பாடி உருகிடும் திருவாசகம் என்னும் தேன் – ஒரு கிறீத்தவ அருட் தந்தையை எப்படிக் கவரமுடியும் ? இது ஒரு முரண்பட்ட நிலையாகத் தெரிகிறது அல்லவா ! இறைவன் என்பவன் ஒருவனே. திருவாசகத்தில் ' சிவனாக ' காட்சியளிக்கும் ஆண்டவன்தான் – பரமண்டலத்தில் வீற்றிருக்கும் பிதாவாக கிறீத்தவ அருட்தந்தை ஜி.யூ போப் அவர்களின் உள்ளத்தில் பதிந்திருக்கலாம். இதனால் அவர் ஆங்கிலத்தில் திருவாசகத்தேனை மொழிபெயர்த்து அனைவருமே பயனுறச் செய்தார் எனலாம்.இலண்டன் மாநகரில் கிறீத்தவதேவாலயத்தில்முழந்தாளிட்டுசெபம்செய்யும் வேளை ' தன்னருகில் மாணிக்கவாசகரும் செபம் செய்வதாக' தான் உணர்ந்ததை –திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில் பதிவிட்டுள்ளார் என்பது மனங்கொள் ளத் தக்கதாகும்.இதுவே சமயங்கடந்த பக்தி நிலை எனலாம்.இதனை வாதவூர் வண்டின் 'திருவாசகம் என்னும் தேன்' செய்திருக்கிறது.



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா

# ‘எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்’ ரோஹினி எம்.பி. சபையில் தெரிவிப்பு

மாத்தளை மனித புதைகுழியுடன் தொடர்புடைய கொலையாளிகளின் பிள்ளைகளும், தனியார் சித்திரவதை முகாம்களை நடத்தியவர்களும் இந்த நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர் சபை முதல்வர் வெளியிட்ட கருத்தால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமைப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் 2024 ஜூலை 23ஆம் திகதி என்னால் எழுப்பப்பட்ட கேள்வியின்போது இடைக்கேள்வியில் தலதா மாளிகைக்கு முன்னால் மூடப்பட்டுள்ள வீதியை திறக்காமை தொடர்பிலானது. அதற்கு இடையூறு ஏற்படும் வகையில் சபை முதல்வர் செயற்பட்டதுடன், அவர் வெளியிட்ட கருத்தின் மூலம் என் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

மாத்தளை மனித புதைகுழியில் 140 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அந்தக் கொலைகாரர்களின் மகள்மார் இங்கே இருக்கின்றனர் என்றும், அது தொடர்பில் விசாரணைகள் நடப்பதாகவும், இங்குள்ளவர்களில் சிலர் தனியார் சித்திரவதை முகாம்களின் உரிமையாளர்கள் என்றும் கூறியிருந்தார். இதேவேளை 87, 88, 89 காலங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முகாம்களை வைத்திருந்தமை புதுமையான விடயம் அல்ல என்றும் கூறியிருந்தார்.

இந்தக் கருத்தில் குறிப்பிட்ட மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகள் என்ற வகையில் நான் மட்டுமே இருக்கின்றேன். அத்துடன் எதிர்க்கட்சியில் நானும் சமிந்திராணி கிரியெல்லவும் மட்டுமே இருக்கின்றோம். இதனால் இது என்னை இலக்காகக் கொண்டு செய்யப்பட்ட அரசியல் கருத்தாகவே பாரக்கின்றேன். இதனை நான் கண்டிக்கின்றேன்.

எவ்வாறாயினும் எனது தந்தை மக்களை கொன்றவர் அல்லர். மக்களை வாழ வைத்தவர் என்பதை முழு மாத்தளை மாவட்டமும் இலங்கையும் அறியும். தந்தையின் மரபணுவே எனது உடலிலும் இருக்கிறது என்பதனையும் கூறிக்கொள்கின்றேன்.

இந்நிலையில் குறிப்பிட்ட கருத்த எனது தனிப்பட்ட பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலானது என்பதுடன், எனது மக்கள் பணிகளுக்கும் கட்டுப்பாடுகளை உருவாக்கும். இதனால் எனது பாதுகாப்பு தொடர்பில் நான் அடிக்கடி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளபோதும். இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலைமையில் ஆளும்தரப்பில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் சொல்லும் இந்தக் கருத்துக்கள் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவை.

இதனால் சபை முதல்வர் 2024 ஜூலை 23ஆம் திகதி வெளியிட்ட கருத்து எனது சிறப்புரிமையை மீறுவதாக அமையும். இந்த விடயத்தை சிறப்புரிமை குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கோருகின்றோம். அத்துடன் சபை முதல்வர் வெளியிட்ட கருத்தை மீளப்பெற்றுக்கொள்ளவும், அதனை ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குவதற்கும் உத்தரவிடுமாறு சபாநாயகரை கேட்டுக்கொள்கின்றேன். இதனை விசாரிப்பதற்காக விசேட குழுவொன்றை அமைக்குமாறும் நான் கோரிக்கை விடுகின்றேன்.

மேலும் அவர் குறிப்பிடும் மனித புதைகுழிகள் தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை சட்டத்தின் முன் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன். இதனைச் செய்யாமல் எனது அரசியலைச் சீர்குலைப்பதற்காக இதனை பயன்படுத்த வேண்டாம் என்றும் கோருகின்றேன் என்றார்.




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT

# அபேக் ஷா மருத்துவமனை பற்றி சபையில் அமைச்சர் விளக்கம்

மஹரகம அபேக் ஷா வைத்தியசாலைக்கு நாளாந்தம் 950 முதல் 1000 பேர் வரை சிகிச்சைக்காக வருகின்றனர். அதேநேரம் கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 36 ஆயிரம் பேர் நோயாளர்களாக விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சத விஜேமுனி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சமிந்திராணி கிரியெல்ல கேட்ட கே ள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹரகம அபேக் ஷா வைத்தியசாலையில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் 30 ஆம் திகதிவரை 6 ஆயிரத்தி 700 புதிய நோயாளர்கள் பதிவு செய்துள்ளதுடன் இந்த காலப்பகுதியில் 36 ஆயிரம் பேர் விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொதுவாக நாளாந்தம் 950 முதல் 1000 பேர் வரை சிகிச்சைக்காக வருகின்றனர்.

அபேக் ஷா வைத்தியசாலை உட்பட வைத்தியசாலைகளில் நிதி நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. மாறாக உபகரணங்கள் நன்கொடையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. என்றாலும் சுகாதார அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் இந்த வைத்தியசாலைக்காக வங்கி கணக்கு ஒன்று இருக்கிறது. அந்த கணக்கு கூற்றின் பிரகாரம் 2020ஆம் ஆண்டு அபேக் ஷா வைத்தியசாலைக்கு 242 மில்லியன் ரூபா நன்கொடையாக்கக் கிடைக்கப்பெற்றுள்ளது. 2021இல் 280 மில்லியன், 2022இல் 337 மில்லியன், 2023இல் 406 மில்லியன், 2024 இல் 461 மில்லியன் மற்றும் 2025இல் இதுவரை 478 மில்லியன் ரூபா இந்தக் கணக்குக்குக் கீழ் இருக்கிறது.

அபேக் ஷா வைத்தியசாலையின் கணக்குக்கு வரும் நிதி நன்கொடைகள் அந்த வைத்தியசாலையின் தேவைக்காக மாத்திரமே பயன்படுத்தப்படும். வேறு வைத்தியசாலைகளின் தேவைக்கு இந்த நிதி பயன்படுத்தப்படாது. அதேவேளை இந்தக் காலப்பகுதில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற நிதி இதுவரை பயன்படுத்தப்படவில்லை.

மேலும் கிடைக்கப்பெற்றுள்ள நன்கொடை நிதியைப் பயன்படுத்தி, இந்த வைத்தியசாலையில் தற்போது இருக்கும் சீடி ஸ்கெனருக்கு பதிலாக புதிய சீடி ஸ்கேனர் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கையை இடம்பெற்று வருகிறது. புதிய இயந்திரம் விலைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் மீதமாகும் பணத்தை பயன்படுத்தி, அபேக் ஷா வைத்தியசாலைக்கு தேவையாகும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்திருக்கிறோம்.

அபேக் ஷா வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு இல்லை. அவ்வாறு தட்டுப்பாடாக இருக்கும் மருந்துகளை பெற்றுக்கொள்ள பிரதேச பணிப்பாளருக்கு அந்த மருந்துகளை தேசிய மட்டத்தில் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி இருக்கிறோம். அதற்காக நிதியும் ஒதுக்கி இருக்கிறோம். அதேபோன்று சில மருந்துகள் பொதுவாக வழங்குவதில்லை. நோயாளர்களின் பெயருக்கே விநியோகிக்கப்படுகின்றன. அந்த மருந்தை பெற்றுக்கொள்ள அதற்கு என விண்ணப்பம் ஒன்று இருக்கிறது. அதனை பூர்த்தி செய்து, மருத்துவ விநியோக பிரிவுக்கு வழங்கினால், அவர்கள் அந்த மருந்தை விநியோகிக்க தீர்மானிப்பார்கள்.

அதனால் இல்லாத மருந்துகளையும் பெற்றுக்கொள்ளதேவையானநடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம் என்றார்.




# அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தும் 'விடுதலை' நிகழ்வின் 2ஆம் நாள் நிகழ்வு இன்று

இலங்கை சிறைகளில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியற் கைதிகளிற்கு நீதி வேண்டிய நினைவேந்தலும், நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது விடுதலைக்கான 'விடுதலை' எனும் தொனிப் பொருளிலான கவனயீர்ப்பின் முதலாம் நாள் நிகழ்வுகள் நேற்றையதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம்கிட்டுப்பூங்காவில்நடைபெற்றது. இன்று இரண்டாம் நாள் நிகழ்வு இடம்பெறும்.

யாழ்ப்பாணம் சங்கிலியன் தோப்பு வாசலில் இருந்து தொடங்கிய நடைபயனம் கிட்டுப் பூங்காவினை அடைந்து, தொடர்ந்து விடுதலை விருட்சத்திற்கான விடுதலை நீர் பொதுக்குவளையிடுதலும், முன்னாள் அரசியற் கைதி விவேகானந்தனூர் சதிஸ் சிறைக்காலத்தில்எழுதிய'துருவேறும்கைவிலங்கு' எழுத்து ஆவணப்பேழை ஆய்வறிமுகவும் நடைபெற்றது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர். சி.ரகுராம், ஊடகவியலாளர் அ.நிக்சன் ஆகியோர் கலந்து கொண்டு நூல் வெளியீட்டுரை மற்றும் ஆய்வுரையினை நிகழ்த்தியிருந்தனர்.

மேலும், குறித்த நிகழ்வின் போது மதத் தலைவர்கள், அரசியற் கட்சிச் செயற்பாட்டாளர்கள், அரசியற் கைதிகளின் குடும்பத்தினர், விடுவிக்கப்பட்ட முன்னாள் அரசியற் கைதிகள், குடிமக்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய 'விடுதலை' நிகழ்வின் இரண்டாம் நாள் இன்று வெள்ளிக்கிழமை நினைவேந்தல் நிகழ்வு மற்றும் அரங்க நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த போராட்டத்தில் கலந்துகொண்ட மகள் ஒருவர் தனது தந்தையை விடுதலை செய்யுமாறு மனமுருகி கோரிக்கை விடுத்துள்ளார். அதில் அவர் தெரிவிக்கையில், அம்மாவின் வயிற்றில் நான் 8 மாசம் இருக்கும் பொழுதே அப்பாவைப் பிடித்து விட்டார்கள். எனக்கு 17 வயது ஆகின்றது. 17 வருடங்களாக தந்தையின் அரவணைப்பின்றி தனியாகவே இருந்துள்ளேன். கடந்த 17 வருட கால அரசாங்கங்களிடம் கோரிக்கை விடுத்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. தற்போதைய அரசாங்கத்திலாவது எனது தந்தையை விடுவிப்பார்களா? என உருக்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இரண்டு பிள்ளைகளும் நான் இறந்தால் அனாதைகளாகிவிடும் அதனால் எனது மகன் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யவேண்டும்என அவரின் தாயார்உருக்கமானவேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்

யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் இன்று இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவி;க்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குரலற்றவர்களின் குரல் அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் சிறைக் கூடங்களை காட்சிப்படுத்தப்பட்டு சிறையிலுள்ளவர்களின் உறவுகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது

நான் கடைசியாக ஜூலை மாதம் 17ம் திகதி அவரை போய்பார்த்துவிட்டு வந்தனான், அவருக்கு வழக்கு நடந்துகொண்டிருக்கு, வழக்கில் என்ன முடிவு வரும் என்று தெரியாது.அவருக்கு ஒரு நல்ல முடிவு வரும் என சொல்லியிருக்கினம்,ஆனால் எனது மகன் இல்லாமல் கஷ்டம்,நான்தான் இந்த பிள்ளைகளை படிப்பித்து வளர்த்துக்கொண்டிருக்கின்றன், இனி எனக்கு வயசும் போயிட்டுது.கண்ணும் விளக்கமில்லை, நெடுக வருத்தம்.

ஆனமுறையிலை,இவர்களிற்கு எந்தவொரு உதவியும் வேண்டாம், அப்பாவின் ஆதரவுதான்வேண்டும்,

எனக்கு இருப்பது ஒரேயொருமகன்தான், அவரை விட்டால் வேறு பிள்ளைகளும் இல்லை,அதனால் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யவேண்டும் என கோரித்தான் நான் இங்கே வந்திருக்கின்றேன்.

இரண்டு பிள்ளைகளும் நான் இறந்தால் அனாதைகளாகிவிடு;ம் அதனால் எனது மகன் ஆனந்தசுதாகரனை விடுதலை செய்யவேண்டும்.

ஆனந்த சுதாகரன் தற்போது உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்,அவரை கொண்டுபோய் போகம்பரை சிறைச்சாலையில் வைத்திருக்கினம், 15 வருடங்களாக மகசின் சிறைச்சாலையில் இருந்தவர்.

தற்போது போகம்பரை சிறைச்சாலையில் உரிய வசதிகள் இல்லை ,கடும் மன அழுத்தத்தில் சிக்குண்டவர் போல காணப்படுகின்றார், பார்ப்பதற்கு மிகவும் கவலையாக உள்ளது.

கடந்த 19 ம் திகதி அவரை பார்த்துவிட்டு வந்தேன் அப்போது தனக்கு உடல்நிலை சரியில்லை என்று அவர் தெரிவித்தார்.அது எனக்கு பெரும் மனகுழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. யாரை கேட்பது என தெரியவில்லை.

மனித உரிமை குழுவிடம் தெரிவித்தேன் அவர்கள் தற்போதுதானே வழக்கு முடிந்தது அடிக்கடி போய்வராதீர்கள் உங்களிற்கு தூரம் என்றார்கள்.

தூரம் என்பதற்காக என்னால் விட்டுவிட்டு இருக்க முடியாது,மனக்குழப்பமாக உள்ளது பிள்ளைகள் இருவரும் அம்மாவும் அப்பாவும் இல்லாத நிலையில் இருக்கின்றார்கள்.

பிள்ளைகள் தாய்பாசமோ தந்தை பாசமோ இல்லாமல் இருக்கின்றார்கள், அன்பாய் அரவணைக்க யாரும் இல்லை.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2025இல் வெளியிடப்பெற்றது